பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 12 வெள்ளிக்கிழமை (25-04-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 148

# கிழக்கில் பல பகுதிகளில் தாக்குதல் நடத்த புலிகள் தயாராகின்றனர்!

## புலனாய்வு அறிக்கைகள் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 25

**வவுனியாவில் படையினர் பெருமளவு குவிக்கப்பட்டு வரும் இவ்வேளையில், கிழக்கில் பரவலாகத் தாக்குதல்களை நடத்துவதற்கு புலிகள் தயாராகி வருகின்றனர் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

வவுனியாவில் பெருமளவு படைகள் தற்போது குவிக்கப்பட்டு வருகின்றன. ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரையிலான பிரதான தரை வழிப்பாதையை திறப்பதே படையினரின் நோக்கமாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

கிழக்கில் இருந்தும் படைகள் வவுனியாவுக்கு நகர்த்தப்பட்டுள்ள இவ்வேளையில், கிழக்கில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதாகவும் —

படையினரை திசைதிருப்பும் நோக்கத்துடன் அவர்கள் கிழக்கில் பரவலாகத் தாக்குதல்களை நடத்தத் தயாராகி வருகின்றனர் என்றும்தெரிவிக்கப்படுகிறது. (இ-3-150)

## கிழக்கிலிருந்து வன்னி வந்து செல்லும் புலிகள்

### படையினரால் தடுக்க முடியவில்லை

கொழும்பு, ஏப். 25

கிழக்கில் இருந்து மட்டக்களப்பு, அம்பாறை, வெருகல் ஊடாக புலிகள் வன்னிக்குச் சென்றுவருகிறார்கள். இவர்களின்இந்த நடமாட்டத்தைத் தடுக்க படையினர் நடவடிக்கை எடுத்த போதும் அது பலன் அளிக்கவில்லை.'

இராணுவ புலனாய்வுப் பணிப்பாளர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவ 2 ஆம் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னி, அநுராதபுரம் பகுதியில் புலிகள் திடீர் தாக்குதல் நடத்தும் சாத்தியத்தை நிராகரிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அதே நேரம் — வன்னியில் விடுதலைப் புலிகள் ஒன்று திரள்வதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## புதிய குடும்ப அட்டை

குடாநாட்டில் உள்ள சகலருக்கும் புதிய குடும்பஅட்டை வழங்கப்பட விருப்பதாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

ஒவ்வொரு குடும்பமும் பெறும் நிவாரணங்கள், உதவிகள், நஷ்டஈடுகள் தொடர்பான விவரங்களை ஒரே நோக்கில் பார்க்கும் வகையில் இந்த புதிய குடும்ப அட்டை அமையவிருக்கிறது.

இந்த குடும்ப அட்டையின் மற்றும் இரு பிரதிகள் கிராம சேவையாளரிடமும், செயலகத்திலும் இருக்கும்.

எந்த நிவாரணம் வழங்கப்பட்டாலும் அவை மூன்று அட்டைகளிலும் பதியப்படும்.

## வன்னி மீதான தாக்குதலுக்கா சந்திரிகா, ரணில் உடன்பாடு?

### விடுதலைப் புலிகள் கேள்வி

கொழும்பு, ஏப். 25

''முன்னர் அரசியல் தீர்வு யோசனையை முன்வைத்து விட்டு யாழ். குடாநாடு மீது அரசு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது.தற்போது ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுக்கும் இடையில் இனப்பிரச்சினைத் தீர்வில் உடன்பாடு கண்ட நிலையில் வன்னி மீதான பாரிய இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கடந்த 22ஆம் திகதி விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில்மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக வெளியுலகுக்குக் காட்டிவிட்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல்களை அரசு தீவிரப்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

## ஈழப் போராளிகளின் நடவடிக்கை தமிழகத்தில் முழுக் கட்டுப்பாட்டில்!

### கருணாநிதி தெரிவிப்பு

லண்டன், ஏப். 25

'' தமிழ் நாட்டில், விடுதலைப் புலிகள் உட்பட இலங்கைப் போராளிகளின் நடவடிக்கைகள் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளன ''

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போராளிகள் சம்பந்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் எதுவும் கடந்த ஆண்டு தமிழ் நாட்டில் நடக்கவில்லை என்று அவர் சட்டப்பேரவையில் கூறினார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் இதுவரை 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகத்துக்கு வந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்பட்ட அகதிகள் தனி முகாம்களில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறிய கருணாநிதி, விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு ஒத்துழைக்கும் கடத்தல்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி




அப்ப அடையாள அட்டைகளும் குடும்ப அட்டைகளும் தான் தாராளமாக புழக்கத்தில்...

## பல்கலைக்கழக ஊழியர் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

அனைத்து பல்கலைக் கழகங்களின் ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனம் நேற்று ஆரம்பித்த வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்தே யாழ். பல்கலை ஊழியர் சங்கம் இன்று அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்கிறது. (இ-3)

## நெதர்லாந்துக் குழு இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஏப். 25

கொழும்பில் உள்ள நெதர்லாந்து தூதரகப் பொறுப்பாளர் அல்போன்ஸ் கெனெக்கின்ஸ் மற்றும் தூதரகத்தின் 4 அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்கள்.

அவசர நிவாரணத்துக்குப் பொறுப்பான பணிப்பாளர் திருமதி பிளாங்ஹட், நிவாரண அதிகாரி ஜே. எம் .ஏ வோல்தமன்ஸ், தூதரக முதல் செயலாளர் திருமதி ஜெனிக் வான் இரும்பின், தென்னாசியப் பிரிவு அதிகாரி திருமதி, எல்.ஏ.ஈ. குயூபின்ஸ் ஆகியோரே மற்றும் நால்வரும் ஆவர்.

இன்று காலை யாழ். செயலகத்துக்கு வந்துசேரும் இவர்களை யாழ். அரச அதிபர் வரவேற்பார்.

அதன்பின் செயலகத்தில் நடக்கும் கூட்டத்தில் உருளைக்கிழங்கு நடுகை தொடர்பாக விவசாயப் பணிப்பாளரும்—

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மீளக் குடியமர்த்தும் பணி மாத இறுதிக்குள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 25

வலி-வடக்கில் 11 கிராம சேவையாளர் பிரிவில் இம்மாத முடிவில் மக்களை மீளக்குடியமர்த்தும் பணி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

மீளக்குடியமர விரும்பும் மக்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப் பட்டு வருகின்றன.

மீளக்குடியமர்த்தப்படும் மக்களுக்கு உடன் தேவையான பொருள்களை வழங்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன்வந்துள்ளது.

மீளக்குடியமர்பவர்கள் என எதிர்பார்க்கப்படும் சுமார் ஆயிரத்து 500 குடும்பங்களின் வீடுகளைப் புனரமைத்துக் கொடுக்கும் பணியை ஜேர்மன் தொழில் நுட்ப கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றுள்ளது.

மீளக் குடியமரும் மக்களுக்கு விவசாயப்பணிக்கு உதவ அவசர விவசாயத் திட்டம் ஒன்று செயலகத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்துக்கு நொறாட் அமைப்பு உட்பட பல சர்வதேச அமைப்புக்கள் உதவ முன்வந்துள்ளன. (இ-3)

## காணாமற்போனோர் பற்றிய விசாரணை

### நேற்று அச்செழுவில் ஆரம்பமானது

யாழ்ப்பாணம், ஏப். 25

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்யப் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணைகள் நேற்று ஆரம்பமாயின.

பலாலிக்கு அருகே அச்செழுப் பகுதியில் நேற்று ஆரம்பமான இந்த விசாரணையில் காணாமற்போனவர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்த 16 பேரும், அவர்களது சாட்சிக் காரர்கள் 5 பேரும் சாட்சியம் அளித்தனர்.

இன்றைய விசாரணையில் 20 பேர் சாட்சியம் அளிப்பர். நாளையுடன் விசாரணைகள் முடிவடையும். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

ராம்கி, சங்கவி நடித்த

**தினமும் என்னை கவனி**

சங்கவி, சுவாதி நடித்த

**மை இந்தியா**

**வீடியோ விமல்,**

யாழ்ப்பாணம்.

(46733)



இராசலிங்கம் சனசமூக நிலையம்
சிவகுமரன் வி. கழகம்/சிறுவர் பாடசாலை

**சீட்டிழுப்பு முடிவுகள்**

இராசலிங்கம் சனசமூக நிலைய சிவகுமரன் விளையாட்டுக்கழக நிதிக்காக 14 - 04 - 97 நடத்தப்படவிருந்த சீட்டிழுப்பு 21 - 04 - 97 இல் நடைபெற்றதென்பதை அறியத் தருவதுடன் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரத்தையும் தருகிறோம்.

1 ஆம் பரிசு லுமாலா —
ச. சுதர்சினி, அண்ணா சிலையடி.
2 ஆம் பரிசு சுவர்க்கடிகாரம் —
ஆ. கௌரீஸ்வரி, நாவலடி.
3 ஆம் பரிசு சுடு நீர்ப் போத்தல் —
இ. செல்வந்தினி, இமையாணன்.

அனைவருடைய ஒத்துழைப்புக்கும் நன்றி!

(46735) — நிர்வாகிகள்



**UNIVERSITY OF JAFFNA**

Applications will be received by me for the following posts from suitable candidates:

1. Professor of Anatomy/Pathology/Forensic Medicine / Medicine / Pharmacology/ Paediatrics / Surgery/ Community Medicine.
2. Endowment Chair in Orthopaedic Surgery/ Oncology.
3. Senior Lecturer Grd II / Tamporary Senior Lecturer Grd. II in Physiology / Community Medicine / Biochemistry/Anatomy / Pathology/ Microbiology / Parasitology / Forensic Medicine/ Pharmacology / Obstetrics&Gynaecology/ Paediatrics /Surgery/ Psychiatry.
4. Lecturer / Temporary Lecturer in Physiology/Community Medicine / Biochemistry / Anatomy / Pathology Microbiology/Parasitology/ Forensic Medicine / Pharmacology/ Obstetrics & Gynaecology/ Paediatrics/ Surgery/ Psychiatry

40 Temporary Demonstrator in Biochemistry.

**Salary Scale:**

Professor:
Rs. 22, 950-6x425-25, 500/- p. m.
Senior Lecturer Grd. II
Rs. 15, 725-5x340-17, 425/- p. m.
Lecturer (Medical)
Rs. 9, 350-10x255-11, 900/- p m.
(A Lecturer recruited to a Medical Faculty with MBBS qualification Will be placed at two steps above Rs. 9, 350/-, ie Rs. 9. 860/-)
Temporary Lecturer (Medical):
Rs. 9, 860/-p. m. (Fixed)
Temporary Demonstrator:Rs. 7, 225/- p. m. (Fixed)

Note:
The salary and allowances will be paid in terms of University Grants Commission Circular No. 705 of 4th March 1997.

Closing date of applications for Professors will be 1997—06—13 and other will be 1997—05—30

Application forms and the other particulars for the above posts whould be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments of this University on a payment of Rs. 20/- for each application at the People's Bank, Model Market Branch, University of Jaffna or at the Shroff's Councter of the University of Jaffna.

Those who wish to obtain the forms and particulars by post should send a money order/ postal order to the value of Rs. 20/- in the name of Registrar, University of Jaffna together with a self addressed Rs 2 50 stamped envelope of 23x10 c. m. in size.

Applicants from Government, Departments, State Corporations and Statutory Bodies should apply through the Head of such Institutions.

Selected candidates may be placed on a suitable salary point on the scale considering his/her special qualifications and or experience.

Appointment on Contract will also be considered.

Note 2:
Additional allowance amounting to 100% of the last drawn salary will be paid as incentive allowance to the staff appointed on contract basis as consultant or equivalent person to the Departments of Surgery, Medicine, Paediatrics, Obstetrics & Gynaecology, Pathology, Microbiology and Pharmacology.

**REGIS TRAR**
University of Jaffna,
Jaffna. (C/614)


# பொலீஸ் அதிகாரியை சுட முயன்ற இளைஞர் சயனைட் அருந்தி மரணம்

## வவுனியாவில் புதனன்று சம்பவம்

கொழும்பு, ஏப். 25

வவுனியா நெலுக்குளம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சந்திரசிறியைச் சுட்டுக்கொல்ல முயன்ற இளைஞர் ஒருவர் சயனைட் உட்கொண்டு உயிரிழந்துள்ளதாக வவுனியா பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பொலீஸ் நிலையப்பொறுப்பதிகாரியை நெருங்கிச் சென்ற பிரஸ்தாப இளைஞர் தான் மறைத்து வைத்திருந்த பிஸ்டலை எடுத்து அவரைச் சுட முயன்றார் என்றும் — பொலீஸ் இன்ஸ்பெக்டர் சந்திரசிறி உடனே தனது துப்பாக்கியால் அந்தஇளைஞரைச் சுட்டார் என்றும் —

அச்சமயம் அந்த இளைஞர் சயனைட்டை உட்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த பிரஸ்தாப இளைஞன் பலாலியைச் சேர்ந்த ராஜ்மோகன் (வயது 21) என அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

இவரிடம் இருந்து இரு கைக்குண்டுகளையும், பிஸ்டலையும் பொலீஸார் மீட்டுள்ளனர்.

(ஐ)

## வடக்கு கிழக்கில் விரைவில் 3 ஆயிரத்து 724 ஆசிரியர் நியமனம்

கொழும்பு, ஏப். 25

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் போட்டிப் பரீட்சை மூலம் விரைவில் நிரப்பப்படும்; 3ஆயிரத்து 724 ஆசிரியர்கள் வடக்கு கிழக்கில் விரைவில் நியமிக்கப்படுவர்.

கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான நாடாளுமன்றத்தில் இத்தகவலைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர் ஆயிரத்து 510 ஆசிரிய நியமனங்கள் வடக்குக் கிழக்கில் வழங்கப்பட்டிருப்பதாகவும் —

இப்பகுதியில் நிலவும் குறைபாடுகளைச் சீர்செய்ய அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

## விளையாட்டு நிகழ்வு

அச்சுவேலி, ஏப். 25

அச்சுவேலி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் அதிபர் திருமதி பு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இல்ல மெய்வல்லுநர் போட்டிகளுக்கு கல்வி வலயம் இரண்டு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

(இ-11)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஏப். 25

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத் தலைவர் க. அருந்தவபாலன் தலைமையில் கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்துக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (நிர்வாகம்), செ. சண்முகநாதனும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (எண்பார்வை) திருமதி கோ. திருநாவுக்கரசு ஆகியோரும்-

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. பாலச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ-117)

## இராணுவ முகாமுக்கு ஜனாதிபதி விஜயம்

கொழும்பு, ஏப். 25

கடந்த ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரத்துக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி சந்திரிகா அங்குள்ள இராணுவ 2 ஆம் பிரிவு தலைமையகத்துக்கும் விஜயம் செய்தார்.

மகாபோதியில் வெள்ளரசு மரத்தை நடும் வைபவத்துக்கு சென்றிந்த ஜனாதிபதி இராணுவத்தின் 2 ஆம் பிரிவு தலைமையகத்துக்குச் சென்று அங்குள்ள குறைபாடுகள் குறித்து சிப்பாய்களுடன் பேசினார்.

மேஜர் ஜெனரல் பற்றிக் பெர்னாண்டோ அங்குள்ள குறைபாடுகள், தேவைகள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கினார்.

போர் முனையில் உள்ள இராணுவ முகாமுக்கு ஜனாதிபதி ஒருவர் விஜயம் செய்தது இதுவே முதல் தடவை எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-150-3)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மகாபொல கொடுப்பனவு 1994/95

(1 ஆவது - 5 ஆவது கொடுப்பனவுகள்)

கலை, விஞ்ஞான பீட மாணவர்கள், சித்தமருத்துவ மாணவர்களுக்கான மேற்படி கொடுப்பனவு 24-04-1997 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளன.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(சி—615)



விரைவில் நடைபெறவுள்ள

**சமய பாட ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான**

**பொது அறிவு**

(மிகப் பிந்திய இலங்கை, சர்வதேச நடைமுறை விடயங்கள், மேலதிக தகவல்களுடன் நவீன ''ஒவ்செற்'' முறையில் கொழும்பில் அச்சிடப்பட்டது)

ஆக்கம்:

**வே. தபேந்திரன் B. Com.**

விலை: ரூபா 80/- மட்டும்

★ யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகின்றது!

(46730)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வைத்திலிங்கம்பிள்ளை

(ஓய்வுபெற்ற அரசாங்க இலிகிதர்)

கந்தரோடையை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி-வைத்திலிங்கம்பிள்ளை 24-04-97இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி சின்னத்தம்பி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும், மகாதேவி, விசாலாட்சி, பிறைசூடி, காலஞ்சென்ற திலகர் மற்றும் கோபாலன், பரஞ்சோதி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோகுலச்செல்வியின் அன்புத் தகப்பனாரும், நாகரத்தினத்தின் அன்பு மாமனாரும், மீனலோசனி (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி), கேதீஸ்வரி (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி), சசீந்திரன் (மாணவன், யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), திருக்குமரன் (மாணவன், யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகுபேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25- 4- 97) நண்பகல் 1. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகரத்தினம்
(மருமகன்)

இராசவீதி,
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

(46734)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் ஓர் அதிகார சக்திக்கு கட்டுப்படுவதை அனுமதியோம்!

## ரஷ்ய – சீனத் தலைவர்கள் கூட்டறிக்கை

மொஸ்கோ, ஏப். 25

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்ஸினும் சீன அதிபர் ஜியாங் செமினும் நேற்று முன் தினம் மொஸ்கோ நகரில் சந்தித்து பேச்சு நடத்தினார்கள்.

புதியதோர் தொடக்கத்துக்கான முதற் படியாக இச்சந்திப்பு அமைந்ததாக அவதானிகள் வர்ணித்தனர்.

இரு தலைவர்களும் இணைந்து வெளியிட்டுள்ள பிரகடனத்தில், ''நமது உலகம் ஒரு முனை அதிகார சக்தியால் கட்டுப்படுத்தப்படும் உலகமாக மாறுவதை அனுமதிக்கக் கூடாது. சர்வதேச உறவுகளைத் தான் விரும்பியபடி ஏகாதிபத்தியப் படுத்த எந்தவொரு தனிநாடும் முயலக் கூடாது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவை குறிவைத்துத்தான் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல – என்று பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

உருவாகி வரும் சீன, ரஷ்யக் கூட்டுறவு அடுத்த நூற்றாண்டுக்கான அணிசேரல் என வர்ணிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மீது அதிருப்தியடைந்துள்ள நாடுகளை ஒன்றிணைக்கும் குரலாக இந்த அணி விளங்கும்.

(ஐ-10)

## இத்தாலி தேவாலய தீ விபத்தில்

# கிறிஸ்துவின் திரு உடலை போர்த்திய துணி தப்பியது!

ரோம், ஏப். 25

இத்தாலியில் கியூரின் நகர கத்தோலிக்க தேவாலயம் வரலாற்றுச் சிறப்புமிக்கது.

சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட யேசுக் கிறிஸ்துவின் திருவுடலை கல்லறையில் அடக்கம் செய்த போது அவரது உடலைப் போர்த்தப் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் துணி இந்த ஆலயத்தில் தான் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்தத் தேவாலயத்தில் நடந்த தீ விபத்தில் தேவாலயத்தின் முக்கிய பகுதிகள் சேதமடைந்தன. ஆனால் மாபெரும் வரலாற்று நினைவு கொண்ட இந்தத் துணி மட்டும் பாதுகாப்பாகத் தப்பியது.

எரிந்து நாசமாகி விட்ட கியூரின் தேவாலயத்தை புனரமைப்புச் செய்ய சுமார் 375 லட்சம் டொலர்கள் தேவைப்படும் எனத் தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-10)

# கடைசி நேரம் வரை கைதிகளை துன்புறுத்தாத கெரில்லாக்கள்

## விடுதலையானோர் ஆழ்ந்த கவலை

லீமா, ஏப். 25

பணயக் கைதிகள் மீட்கப்பட்ட வெற்றி நாள் பெருநாட்டில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுவரும் அதே வேளை இச்சம்பவத்தில் பலியாகிவிட்ட கெரில்லாக்களின் ஞாபகம் விடுதலையான கைதிகள் பலரை சோகத்தில் ஆழ்த்தி விட்டிருக்கிறது.

தூதரக இல்லத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் இடதுசாரி கெரில்லாக்கள் தங்களை மிகவும் கண்ணியமாகவும், அன்பாகவும் நடத்திய விதத்தை கைதிகள் பலர் நினைவூட்டுகின்றனர்.

''கடந்த 18 வாரங்களில் ''துபக் அமாறு'' போராளிகள் பணயக் கைதிகள் எவருக்கும் தீங்கு விளைவிக்கவில்லை. கைதிகளை மிகுந்த அன்போடும், மரியாதையோடும் நடத்தினார்கள். இறுதித் தாக்குதலின் போது கூட கைதிகளைக் கொலை செய்ய அவர்கள் முயலவில்லை. தங்களின் கோரிக்கையில் தான் அவர்கள் குறியாக இருந்தார்களே தவிர பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவது அவர்களது நோக்கமாக இருக்கவில்லை. எனவே சமாதானமான முறையில் இந்த நெருக்கடி தீர்க்கப்பட்டிருக்க வேண்டும்'' என மனித உரிமை அமைப்பொன்று தெரிவித்துள்ளது. (ஐ-10)

# நேட்டோ விரிவாக்கம்

வாஷிங்டன், ஏப். 25

நேட்டோ விரிவாக்கம் குறித்து ரஷ்யாவுக்கு இருக்கும் கருத்துவேறுபாடுகள் தொடர்பாக விவாதிக்க அமெரிக்க வெளியுறவுச் செயலர் திருமதி மடலின் ஆல்பிறைட் அடுத்த வாரம் மொஸ்கோ செல்வார் என வெள்ளைமாளிகை அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

நேட்டோ விரிவாக்கம் குறித்து ரஷ்யா தனது அதிருப்தியைத் தொடர்ந்து வெளியிட்டு வருவது தெரிந்ததே. (ஐ-10)

# ஹொங்கொங்கில் சீனாவின் கொடி

உலக அரங்கில்

ஹொங்கொங், ஏப். 25

1841 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி ஹொங்கொங்கில் பிரிட்டிஷ் கொடி முதன் முதலாக ஏற்றப்பட்டது.

156 ஆண்டுகளுக்குப் பின் இவ்வாண்டு எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி நள்ளிரவில் பிரிட்டிஷ் கொடி இறக்கப்படும். அதைத்தொடர்ந்து சீனாவின் தேசியக் கொடி அங்கு ஏற்றப்படும்.

சீனக்கொடி ஏற்றப்படுவதற்கு முன்னர் பிரிட்டிஷ் தேசிய கீதமும் ஏற்றப்பட்ட பின்னர் சீன தேசிய கீதமும் ஒலிக்கப்படும். (ஐ-10)

# கெரில்லாக்களின் உதைபந்தாட்ட தளத்தின் கீழ் வெடி குண்டுகள்!

## குறித்த நேரத்தில் வெடித்தன

லீமா, ஏப். 25

லீமா நகர ஜப்பானியத் தூதரக முற்றுகை அதிரடித் தாக்குதல் மூலம் முறியடிக்கப்பட்டமை குறித்து மேலும் புதிய தகவல்கள் வெளிவந்துள்ளன.

நன்கு திட்டமிடப்பட்ட இந்த அதிரடித் தாக்குதலுக்கு கெரில்லாக்களின் உதைபந்தாட்ட விளையாட்டே சாதகமாக அமைந்துள்ளது.

தூதரக இல்லத்தின் வரவேற்பு அறையைத் தங்களின் உள்ளக உதைபந்தாட்ட (Indoor Foot Ball Game) விளையாட்டுத் தளமாக கெரில்லாக்கள் பயன்படுத்தி வந்ததை உளவுத் தகவல் மூலம் அறிந்த படையினர் —

சுரங்க வழிகள் மூலம் அந்த அறையின் கீழ்ப் பகுதிக்குள் நுழைந்து அங்கு பெரும் வெடிகுண்டுகளைப் பொருத்தினர் என்றும் —

கெரில்லாக்கள் சுமார் 10 பேர் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்தசமயம் அந்தக் குண்டுகள் அனைத்தும் ஒரே சமயத்தில் வெடிக்க வைக்கப்பட்ட கையோடு கொமாண்டோ படையினர் தூதரகத்துக்குள் மின்னல் போல் பாய்ந்தனர் என்றும் தெரிய வந்துள்ளது.

உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் 8 கெரில்லாக்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மீனாவில் பெரும் தீ பரவிய வேளை

# முகாமை மூடி வைத்த செயலுக்கு சவூதி மீது இந்தியா கண்டனம்

## இந்திய விசாரணைக் குழு மக்கா செல்கிறது

மக்கா, ஏப். 25

புனித மக்கா நகரை அடுத்துள்ள மீனாவில் 343 பயணிகள் உயிரிழந்த தீ விபத்து பற்றி விசாரிக்க இந்திய அரசாங்கம் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை சவுதி அரேபியாவுக்கு அனுப்பவுள்ளது.

இந்தியப் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் இந்த நாடாளுமன்றக் குழுவை நியமித்ததாக வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

இந்த விபத்தில் பலியான இந்திய பயணிகளின் எண்ணிக்கை இன்னமும் உறுதிப்படுத்தப்பட வில்லை.

இதற்கிடையில்—

இந்திய பயணிகள் தங்கியிருந்த முகாமை சவுதி அதிகாரிகள் பூட்டி வைக்காமல் இருந்திருந்தால் மீனா தீ விபத்தில் இறந்துபோன இந்தியர்களை காப்பாற்றியிருக்கலாம் என ஜெட்டாவிலுள்ள இந்திய அதிகாரி அவுஷல் அமுனுல்லா தெரிவித்துள்ளார்.

தீ பரவிய முதல் இடத்தில் இருந்து 20 நிமிடங்களின் பின்னரே இந்திய முகாம்களில் தீ பிடித்தது. ஆனால் சவுதி அதிகாரிகள் இந்திய யாத்திரிகர்களை வெளியேறுவதற்கு இடமளிக்காது முகாமைப் பூட்டி விட்டனர் என்றும் —உயிர் தப்பியோர் தெரிவித்தனர்.

யாத்திரிகர்களின் ஒவ்வொரு முகாமுக்கும் ஒரு சவுதி வழிகாட்டி நியமிக்கப்பட்டிருந்தார்.

தீ பரவ ஆரம்பத்ததும் பீதி கொண்ட யாத்திரிகர்கள் வெளியேற அனுமதிக்கப்படவில்லை. தீ இந்திய முகாமுக்குப் பரவிய பின்னர் கூட பிரதான வாசலைப் திறந்து அவர்கள் உயிர்தப்ப அனுமதிக்க வில்லை. பதிலாக பிரதான வாசலைப் பூட்டி வைத்திருந்தனர் என அமுனுல்லா மேலும் தெரிவித்தார்.

இந்தியாவின் உத்தியோக பூர்வமான இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து சவுதி அரசு இன்னமும் கருத்து எதையும் வெளியிடவில்லை.

(ஐ-10)

# குஜ்ரால் தென்னாபிரிக்கா செல்வார்

புதுடில்லி, ஏப். 25

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவின் அழைப்பை ஏற்று இந்தியாவின் புதிய பிரதமர் ஐ. கே. குஜ்ரால் அடுத்த மாதம் அங்கு விஜயம் செய்யவுள்ளார். (ஐ)

## இராணுவ நடவடிக்கையினால்

# சாவகச்சேரி பிரதேச சபைக்கு ரூ.7 லட்சத்துக்கு உடைமை இழப்பு

தென்மராட்சி, ஏப். 25

கடந்த வருடம் இடம்பெற்ற ''சூரியப்பிரகாசம்'' நடவடிக்கையின்போது சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய், மிருசுவில், வரணி, சரசாலை ஆகிய உப அலுவலகங்களிலிருந்து 6 இலட்சத்து 85 ஆயிரத்து 50 ரூபா பெறுமதியான அலுவலக் உபகரணங்கள், தளபாடங்கள், ஆயுர்வேத வைத்திய சாலைப் பொருள்கள், பொது நூல் நிலையத் தளபாடங்கள், புத்தகங்கள் ஆகியவை காணாமற் போயுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

உப அலுவலகங்களில் பல பதிவேடுகள் காணாமற் போயுள்ளதால் பொருள்களின் முழுமையான பெறுமதியை மதிப்பிட முடியவில்லை எனவும் இப்பொருள்கள் பதிவேடுகளின் பிரகாரம் பத்து இலட்சத்துக்கு மேல் பெறுமதியுள்ளவையெனவும் தெரிவிக்கப்பட்டது.

கச்சாய் உப அலுவலகத்தில் 1 இலட்சத்து 53 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான பொருள்களும்,—

மிருசுவில் உப அலுவலகத்தில் இரண்டு இலட்சத்து 2 ஆயிரத்து 900 ரூபா பெறுமதியான பொருள்களும்—

வரணி உப அலுவலகத்தில் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான பொருள்களும்—

சரசாலை உப அலுவலகத்தில் இரண்டுலட்சத்து 14 ஆயிரத்து 650 ரூபா பெறுமதியான பொருள்களும் காணாமற் போயுள்ளதாக விசேட ஆணையாளர் பு. சுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார்,

(ஐ-177)

# கிருமி நாசனி விநியோகம்

சாவகச்சேரி, ஏப். 25

மீசாலை—புத்தூர்ச் சந்தியில் உள்ள கமநல சேவை நிலையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான கிருமி நாசனிகள் பலவும் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவ்வேளை கிருமி நாசனி தெளிகருவிகளும் கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ-31)

# இனவாத நோக்கங்களுக்கு இனிமேலும் இடமளியோம்!

## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 25

''பேரினவாதத்தை பேசியும், தூண்டியும் சிலர் தொடர்ந்து முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி வருகின்றனர்; இந்தப் பிற்போக்கு வாதிகளின் பேரினவாதப் பிரயத்தனங்களுக்கு அரசு ஒருபோதும் இடமளிக்காது.''

—ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்டுத் தெரிவான தலைவர்கள், உபதலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் கடந்த செவ்வாயன்று இக் கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் மத்தியில் ஐக்கியத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும். எவர் எதைச் சொன்னாலும், எந்தச் சவாலை எதிர் நோக்கினாலும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக அரசினால் முன்வைக்கப்பட்டிருக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை முன்னெடுத்து தீர்வைக் கண்டே தீருவோம் — என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனையாகிறது**

தமிழ்மொழி, பல்தேர்வு வினாக்கள் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் ஆண்டுகளுக்குரியது. இத்துடன் மரபுச் சொற்கள். கைந்நூல். இலவசம் ஆக்கம்: செ. சுதாகரன், எங்கும் கிடைக்கும். [46717]

**விற்பனைக்கு**

யன்மார் யப்பான் மொடல் ரூ சிலின்டர் 30, கோஸ்பவர் (போட்) விற்பனைக்கு உண்டு. R. சிவஞானசுந்தரம், (துரை) றியல் வீடியோ சென்ரர், வல்வெட்டித்துறை. [சி/611]

**தவறிவிட்டது**

வைத்தியசாலை வீதி, மின்சார வீதி, பொஸ்கோவுக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. இதைக் கண்டு எடுத்தவர்கள் வீடியோ ஆனந் மானிப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். செ. பாலச்சந்திரன் கல்லூரி முகப்பு, சுழிபுரம். [46715]

**ஆண்டு – 5 புலமைப்பரிசில்**

ஆண்டு – 5 புலமைப்பரிசில் புதிய பரீட்சைத் திட்டத்துக்கு அமைவான விசேட பயிற்சிகள் விற்பனையாகிறது. விலை ரூபா 100/- வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை இல, 04, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். [சி/531]

**படிவம்**

ஆசிரியர் சேவை தரம் - I விண்ணப்பப் படிவம் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 5.00/- பாரதி பதிப்பகம் 430, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். [46726]

**மாறிவிட்டது**

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் எனது லேடீஸ் சைக்கிளுக்குப் பதிலாக தவறுதலாக வேறொரு லேடீஸ் சைக்கிள் எடுத்து வரப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங் காட்டி பெற்றுக் கொள்ளவும். P. ஜெகநாதன், 249, நாயன்மார் வீதி, நல்லூர். (46712)

**SPOKEN ENGLISH**

சுலபமான முறையில ஆங்கிலம் கதைக்கப் பயில, ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [46701]

### பயிற்சி நெறி ஆரம்பம்

நவாலி, ஏப். 25

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் முறைசாராக் கல்வி தொழிற்றிறன் அபிவிருத்திப் பயிற்சிக்கான தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி நெறிகள் ஆரம்பமாகியுள்ளன. (ஐ–100)

### வைத்திய சேவை

**Dr. சிவனடியான்**

கொழும்பிலிருந்து திரும்பி மீண்டும் தன் சேவையை ஆரம்பித்துள்ளார். காலையில் நவாலியிலும், மாலையில் ஆனைக் கோட்டையிலும் சிகிச்சையளிக்கப்படும்.

Dr. சிவனடியான்
(46471)

## உதயம்

**பொருள்கள் வாடகைக்குக் கொடுக்குமிடம்**

பீங்கான், ரம்ளர், தண்ணீர் ரம்ளர், கறி வாளிகள், கறி டிஸ், பிளாஸ்ரிக் பாய்கள், தண்ணீர் பைவர், பந்திப் பாய், சமையற் பாத்திரங்கள், கிடாரங்கள், ஐஸ்கிறீம் கப்ஸ்,

**இன்னும் பல.**

**உதயம்**

178, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(46480) (வெள்ளை மாளிகை அருகில்)

உங்கள் வீட்டில் மின்சாரம் இல்லையா?
அக்கவலையை இன்றே தீர்த்துக் கொள்ளுங்கள்

அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு சூரிய ஒளியில் இயங்கும்

## "சோலர் பனல்"

## 'SOLAR PANEL'

**WITH TEN YEARS GUARANTEE CARD**

பத்து வருட உத்தரவாதத்துடன் இணைப்புக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

தொலைக்காட்சிப் பெட்டிகள், மின் விளக்குகள் ஏனைய மின்தேவைகளுக்கும் பயன்படுத்தக்கூடியவை.

**விற்பனையாளர்:**

நல்லைக் குமரன்
124, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(9542)

## கிறிஸ்தவ இறையியல் கல்லூரி

**VALEDICTORY SERVICE**

## திருப்பணியர் அனுப்பு-வழிபாடு

**டிப்ளோமா பட்டமளிப்பு**

**ஏப்ரல் 27 ஆம் நாள் (27-4-97)**
**ஞாயிறு பி. ப. 3. 00 மணி (S. L. T)**
**வட்டுக்கோட்டை**
**யாழ்-ஆதீன ஆசன ஆலயத்தில்**

பேராயர் அறிவர் எஸ். ஜெபநேசன்
அவர்கள் தலைமையில் நடைபெறும்.

வண. பிதா அறிவர் ரியன்சி பெரேரா
அவர்கள் அருளுரை ஆற்றுவார்.

இறையியல் இல்லம்
வட்டுக்கோட்டை.
(46722)

## 5-வது ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 18 — 11 — 1923

மறைவு: 19 — 04 — 1992

### திருமதி சின்னஸ்வாமி சர்மா இந்திராக்ஷி அம்மா

**திதி: அபரபஷ திருதியை (25-4-1997)**

இவ்வுலகில் தோன்றி எமது குடும்பத்தின் தலைவியாகவும், அன்னையாகவும், அத்தையாகவும், பாட்டியாகவும் விளங்கி எம்மையெல்லாம் வழிநடத்தி அமரத்துவமடைந்த அம்மாவின் ஆன்மா அம்பிகையின் சரணடையப் பிரார்த்திக்கின்றோம்.

சி. பாலசண்முக குருக்கள் (மகன்),
மருமகள், பேரப்பிள்ளைகள்.

ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்,
(பிரதம குரு)
கட்டுடை, மானிப்பாய்.
(46708)

## CHAVA MEDILAB

## மருத்துவ ஆய்வுகூடம்

**டச்சுவீதி, சாவகச்சேரி.**

மீண்டும் ஆய்வுகூட சேவை 25 - 4 - 97
தொடக்கம் நடைபெறுகின்றது.

மு. குமாரசாமி
M. L. T.
(46725)

**1st. in Com. G. A. Q.** ] 97/98 கல்வியாண்டு

**பேராதனை, யாழ். பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

பல்கலைக்கழக பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

விண்ணப்பப் படிவங்களையும், விவரங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு:
**S. அருள்நங்கை**

## புதிய உயர் கல்லூரி

**ஆரியகுளம் சந்தி, யாழ்.**
(46724)

## வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் (பிரிவு 268) இன் பிரகாரமான அறிவித்தல்

வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல், வீதியோர எல்லைச் சுவர்கள் அமைத்தல் என்பன சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆகவே கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களை புதுப்பிப்பதற்கும், வீதியோர எல்லைச்சுவர்கள் அமைப்பதற்கும் பிரதேச சபையில் இருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும், மானிப்பாய்ப்பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகங்களில் அறிந்து கொள்ளலாம்.

**துரையப்பா வைத்திலிங்கம்**
**விசேட ஆணையாளர்**
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
நகரமண்டபம்,
மானிப்பாய்,
1997 - 04 - 19. (சி–613)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 07 — 1923

மறைவு: 05 — 04 — 1996

### திருமதி கந்தையா பாக்கியம்

**திதி: 25 — 04 — 1997**

நீங்கள் இவ்வுலகை விட்டுப்பிரிந்து
ஒருவருடம் சென்று விட்டாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதை
என்றும் வேதனைப்படுத்துகிறது.

பிரிவால் துயருறும்:
**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளை, உற்றார், உறவினர்கள்.**

தகவல்:
**க. நாகராசா**
(மகன்)

கரம்பகம்,
மிருசுவில்.
(9541)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு நாட்டு பணயக் கைதிகளின் முற்றுகை முறியடிப்பு

# அதிபர் பிஜிமோறியின் அரசியல் செல்வாக்கை உயர்த்துமா?

பெருநாட்டின் தலைநகரான லீமாவிலுள்ள ஜப்பானிய தூதரகத்தில் ''துபக் அமாறு'' போராளிகளால் பணயக் கைதிகளாகக் கடந்த 18 வாரங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 72 பணயக் கைதிகள் அரசின் அதிரடி நடவடிக்கை மூலம் கடந்த செவ்வாயன்று விடுவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் குறித்தும் இதன் அரசியல் முக்கியத்துவம் குறித்தும் பி. பி. சியின் சிங்கள சேவை வழங்கிய கண்ணோட்டத்தை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

**பெரு** நாட்டு கொமாண்டோப் படை வீரர்கள் லீமா நகரில் அமைந்துள்ள ஜப்பானியத் தூதரக வளாகத்தினுள் நுழைந்ததைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாக ஒலிக்கத் தொடங்கின.

72 பேரை பணயக் கைதிகளாகச் சிறை வைத்திருந்த இடதுசாரிப் போராளிகளுடன் சிறிது நேரம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து அரச படை வீரர்கள் தூதரகக் கூரை மீது ஏறி போராளிகளின் சிவப்பு, வெள்ளை நிறத்தினாலான கொடியை அகற்றினர்.

இந்தத் தாக்குதலின்போது 14 போராளிகளும் இரு அரச படை வீரர்களும் கொல்லப்பட்டனர். மோதலின் போது காயமடைந்த பணயக் கைதியான பெருவின் உயர் நீதி மன்ற நீதிபதி ஹார்லூயிஸ் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது மாரடைப்பால் இறந்துள்ளார்.

கடந்த 4 மாதங்களாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததை அடுத்து இராணுவத்தை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தத் தான் முடிவெடுத்தது பற்றி பெரு அதிபர் அல்பேட்டோ பிஜிமோறி பின்வருமாறு தெரிவித்தார்.

''கிளர்ச்சியாளர்கள் நன்கு ஆயுதந் தரித்து இருந்தனர். எங்களுக்கு மாற்றுவழி எதுவும் இருக்கவில்லை. எனவே நாங்கள் அந்த நடவடிக்கையை மேற்கொண்டோம். பணயக் கைதிகளைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருந்தது.

பெரு நாட்டில் போராளிகளுக்கு நாங்கள் எதுவித அனுதாபமும் காட்டமாட்டோம். நாங்கள் எதிர்காலத்திலும் இவ்வாறே ஜனநாயகத்தைக் காப்பாற்றுவோம்'' — என்று அவர் தெரிவித்தார்.

பெரு அதிபருடன் தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டதாக ரோக்கியோவில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ஜப்பானியப் பிரதமர் ஹஷிமோட்டோ தெரிவித்தார்.

''நான் உங்களது நிலையில் இருந்திருந்தால் இதையே செய்திருப்பேன். இந்த நடவடிக்கையை நீங்கள் ஏன் எடுத்தீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இருப்பினும் இது பற்றிய முன் அறிவிப்பு எனக்குக் கிடைக்காதது குறித்து மனம் வருந்துகிறேன்'' என்றார் அவர்.

பணயக் கைதிகள் விவகாரத்தில் தன்மீது நம்பிக்கை வைத்திருந்த ஜப்பானிய மக்களுக்கு பெரு அதிபர் பிஜிமோறி தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். அதே நேரம் இந்த விவகாரத்துக்கு உடனடியாகத் தீர்வு காண முடியாமற் போனது குறித்து ஜப்பானிய மக்களிடம் மன்னிப்பும் கோரினார்.

**தொகுப்பு: கஜனி**

ஜப்பானிய மக்கள் பெரு அரசாங்கத்தின் மீது வைத்த நம்பிக்கை குறித்து அதிபர் பிஜிமோறி மனத்திருப்தியடைந்துள்ளார்.

''இந்த அதிரடி இராணுவ நடவடிக்கை பற்றி ஜப்பான் அரசுக்கு நான் நேரகாலத்துடன் அறிவிக்கவில்லை. இதற்குக் காரணம் ஓர் அதிரடி நடவடிக்கையின் சாதகங்களை நான் இழக்கவிரும்பவில்லை என்பதே ஆகும்'' என்று பிஜிமோறி தெரிவித்தார்.

### 126 நாள்கள் நீடித்த நாடகம்

இடதுசாரிப் போராளிகளின் இந்தப் பணயக் கைதிகள் விவகார நாடகம் கடந்த 126 நாள்களாக இடம்பெற்று வந்தது.

நீண்டகாலமாக பெரு நாட்டின் சிறைகளில் வாடும் தங்கள் சகாக்களை விடுவிக்க வேண்டும் என்பதே போராளிகளின் கோரிக்கையாக இருந்தது. இதற்கு அரசு இணங்காததை அடுத்து விவகாரம் நீடித்துக் கொண்டே போனது.

### போராளிகள் சீற்றம்

ஜப்பானியத் தூதரக வளாகத்திற்குள் அரச படைகள் திடீரெனப் புகுந்ததை குற்றமாகவே காண்கிறார் போராளிகள் தரப்புப் பேச்சாளரான இஷாக் விலாஸ்கோ.

பெரு நாட்டு அரசின் அரச பயங்கரவாதத்துக்கு எதிராக தாங்கள் தொடர்ந்து போராடுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

### அரச பயங்கரவாதம்

''நாங்கள் ஜனாதிபதி பிஜிமோறிக்கு எதிராகத் தொடர்ந்து போராடவில்லை. இந்த நாட்டில் இடம்பெற்றுவரும் அநியாயங்களுக்கு எதிராகவே போராடுகிறோம். மனித உரிமைகளை மறுக்கும் அரச பயங்கரவாதமே இந்த நாட்டில் உள்ளது. தொழில் பார்க்கும் உரிமை, சொந்தக் கலாசாரங்களைப் பேணும் உரிமை, பொதுச் சுகாதாரத்தைப் பேணும் உரிமை, கல்வி கற்கும் உரிமை போன்ற மனித உரிமைகள் இந்த அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுள்ளன'' என்று இஷாக் விலாஸ்கோ தெரிவித்தார்.

### அதிபருக்கு பெரும் புகழ்

முடிவு காணப்படாது இழுபட்டுக் கொண்டே இருந்த பணயக் கைதிகள் நாடகத்தைத் தனக்கு மேலும் புகழைச் சேர்த்துக் கொண்டு அல்பேட்டோ பிஜிமோறி முடிவுக்குக் கொண்டு வந்துள்ளார்.

பணயக்கைதிகளை அதிரடி நடவடிக்கை மூலம் விடுவித்ததால் கிடைத்துள்ள புகழுடன் அல்பேட்டோ பிஜிமோறியால் தொடர்ந்து அரசியலை மேற்கொள்ள முடியுமா?

இதற்கான பதிலை பி. பி. சியின் தென் அமெரிக்கச் செய்தியாளர் நிக் ஐசன் தருகிறார்:

''இந்த அதிரடி நடவடிக்கையைத் தொடர்ந்து அதிபர் பிஜிமோறியின் புகழ் மேலும் அதிகரிக்கும் என்பதே எனது எண்ணமாகும். கடந்த 4 மாதங்களாக பிஜிமோறியின் புகழ் குன்றிக்கொண்டே போனது. அதிரடிச் சம்பவத்தின் மூலம் பிரச்சினை தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்து எல்லோரும் புனர்ஜென்மம் எடுத்துள்ளனர். இதனால் பிஜிமோறியின் புகழ் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உருவாகியுள்ளது. முன்னர் 'சைனிங் பாத்' எனப்படும் போராளிக் குழுவைத் தோற்கடித்தார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. தற்போது நாட்டின் இரண்டாவது பெரிய போராளிக் குழுவான ''துபக் அமாறு'' கிளர்ச்சியாளர்களைத் தோற்கடித்த வண்ணம் உள்ளார்'' —என்கிறார் அந்தச் செய்தியாளர்.

★

---

## அமைச்சரின் சகோதரர் சு. க விலிருந்து ராஜினாமா

கொழும்பு, ஏப். 25

திவுலுபிட்டிய பிரதேச சபை உறுப்பினர் சாலிய பண்டார திசா நாயகா தனது பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் ராஜினாமா செய்துள்ளார்.

தனது ராஜினாமா பற்றிய தகவலை அவர் ''பக்ஸ்'' செய்தி மூலம் கட்சியின் செயலாளர் தர்மசிறிசேன நாயகாவுக்கு அறிவித்துள்ளார்.

சாலிய பண்டார திசாநாயகா இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை, கிராம அபிவிருத்தி அமைச்சர் எஸ். பி. திசாநாயகாவின் சகோதரர் ஆவார். (ஐ-10)

---

## வளமான வாழ்க்கைக்கு தாராள சிந்தை தேவை

**வை**யத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது நமது சமயங்கள். ஒழுக்கம், கட்டுப்பாடு, தளராத சிந்தை இவை நமது சமூகத்துக்கு இன்று மிக முக்கியமானவை.

இவற்றிலே எவற்றிலும் தளராதசிந்தை நமக்கு ஏற்படுமாயின் வாழ்க்கையில் வெற்றி உண்டாகும். இதனை நமது முன்னோர்கள் புராணங்கள், காவியங்கள் மூலம் எடுத்துக் கூறினார்கள். இல், வில், சொல் மூன்றிலும் தளராத சிந்தனையுடன், ஏகார சித்தத்துடன் வாழ்வது அவசியம் என வாழ்ந்து காட்டியவன் ஸ்ரீராமன். அரிச்சந்திரன் சத்தியத்தை பாதுகாத்து தளர்வின்றி வாழ்ந்து காட்டியவன்.

நமது நாயன்மார்களில் மணிவாசகப் பெருந்தகை 'நாம் யார்க்கும் குடியல்லேம்' எனக் கூறினார், பாண்டியனது அரசியலில் அவர் அமைச்சராக இருந்தும் இறைவனிடம் இருந்த தளராத சிந்தை அவரை அடிமைப்படுத்தவில்லை.

அப்பர் சுவாமிகள் வாழ்க்கை யாவரும் அறிந்தது. தமது தள்ளாத வயதிலும் — நிலையிலும் — இறைவனைத் தரிசிக்கக் கைலை செல்கிறார். இடையில் சிவமுனிவராக இறைவன் காட்சியளிக்கிறார். கைலையாத்திரையின் கஷ்டத்தை எடுத்துக்கூறுகிறார். திரும்பிச் செல் எனக் கேட்கிறார். அப்பொழுது அப்பர் பெருமான் தம் நிலையினைச் சிறிதும் சிந்திக்காது மனத் தளர்ச்சியின்றி பக்தி வைராக்கியம்மிக ''ஆளுநாயகன் கைலையில் இருக்கை கண்டல்லால் மாளுமிவ்வுடல் கொண்டு மீள்கேன்'' என்று கூறுகிறார் அவரது தளராத சிந்தையை நமக்கு எடுத்துக் கூறுவது இதுவாகும்.

**ஞானக்கதிர்**

அத்தகைய தளராச் சிந்தை இன்று நமக்குத் தேவை. உலகியலுக்கும் அவசியமானதாகும். இதற்கு இறைவனைச் சிக்கெனப் பிடித்தலே சிறந்த வழியாகும்.

அபிராமிப் பட்டரும் 'தளராத சிந்தை'யை இறைவியிடம் வேண்டுகின்றார்.

அத்தகைய சிந்தையை இறைவனை மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் ஒன்றித்து உணர்ந்து வழிபடுவதன் மூலமே [illegible] பெற்றுக்கொள்ளலாம்.

- சோ. இ. பி. குருக்கள்

---

# மாணவரின் விசேட அ. அட்டைகள் செயலகத்தில் நீண்ட நாள் தேக்கம்!

## அதிபர்கள் வந்து எடுத்துச் செல்லவில்லை

வலி.தெற்கு, ஏப். 25

யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் இருந்து விண்ணப்பித்த மாணவர்களில் 3 ஆயிரத்து 471 மாணவர்களுடைய விசேட அடையாள அட்டைளை இன்னமும் பாடசாலை அதிபர்கள் வந்து பெற்றுக் கொள்ளாமையால் யாழ்ப்பாணம் செயலகத்திலுள்ள விசேட அடையாள அட்டைகள் வழங்கும் பிரிவில் தேங்கியுள்ளன என்று அதன் நிர்வாக அதிகாரி ரி. திருலிங்கநாதன் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட 104 பாடசாலை அதிபர்களுக்கு இது சம்பந்தமாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் — உரிய அதிபர்கள் உடனடியாக செயலகத்துக்கு வந்து அவற்றை பொறுப்பேற்றுச் செல்லுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

உடுவில் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பின்வரும் பாடசாலை மாணவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உடுவில் மகளிர் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, மயிலணி சைவ வித்தியாசாலை, ஏழாலைசைவ மகாஜனா வித்தியாசாலை, ஏழாலை மகா வித்தியாலயம், உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, இராமநாதன் கல்லூரி. (இ-152)

## அ. அட்டை விநியோகம்

நவாலி, ஏப். 25

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த உயரப்புலம் (132), சுதுமலை தெற்கு (130) கிராம சேவையாளர் அலுவலகங்களில் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பித்தவர்கள் அந்தந்த கிராம சேவையாளர் அலுவலகங்களுக்குச் சென்று பெற்றுக் [illegible]னர். (ஐ-100)

## திடீர் மழையினால் புகையிலை பாதிப்பு

உரும்பிராய், ஏப். 25

அண்மையில் பெய்த மழையின் காரணமாகப் புகையிலைச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். புகையிலையின் மீது படிந்துள்ள பாணி மழை நீரினால் கழுவப்பட்டு விட்டமையே இதற்குக் காரணம் ஆகும்.

புகையிலை முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும் இவ்வேளையில் மழை பெய்ததனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்புகையிலைமதிப்புடன்விற்க முடியாது என விவசாயிகள் கவலைப்படுகின்றனர். (ஐ-154)

## விவசாய சம்மேளனம் நவாலியில் அமைப்பு

### சகலரையும் பதிவுசெய்யக் கோரிக்கை

நவாலி, ஏப். 25

நவாலியில் விவசாய சம்மேளனமொன்று கடந்த 17 ஆம் திகதி உடுவில் பெரும்பாக உத்தியோகத்தர் குகதாசன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நவாலி, கிழக்கு தெற்கு, வடக்கு கிராம சேவையாளர் பிரிவுகளை ஒன்றிணைத்து இச்சம்மேளனம் செயற்படும். இதன் மூலம் கட்டாக்காலி கால்நடைகள் பிடித்தல், விவசாய உள்ளீடுகளை உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்தளித்தல், சிறு தானியங்களையும் விதைநெல் என்பனவற்றையும் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்குதல், கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல் போன்ற பல்வேறு திட்டங்கள் மேற் கொள்ளப்படும்.

இச் சம்மேளனத்தில் விவசாயிகள் அனைவரும் அங்கத்தவராகச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி நூலகங்களில் இருந்து
# 3 ஆயிரத்து 386 நூல்கள் காணாமற் போயுள்ளன

தென்மராட்சி, ஏப். 25
கடந்த வருடம் இடம்பெற்ற 'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் போது சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கச்சாய், வரணி, மிருசுவில் சரசாலை ஆகிய உப அலுவலகங்களின் பொது நூல் நிலையங்களிலிருந்து ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான 3 ஆயிரத்து 386 புத்தகங்கள் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சாய் பொது நூல் நிலையத்தில் 30 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான ஆயிரத்து 78 புத்தகங்களும் —

வரணி பொது நூல் நிலையத்தில் 39 ஆயிரம் ரூபா பெறுமதியான 407 புத்தகங்களும்—

மிருசுவில் பொது நூல் நிலையத்தில் 75ஆயிரத்து500 ரூபாபெறுமதியான ஆயிரத்து 213 புத்தகங்களும் சரசாலை பொது நூல் நிலையத்திலிருந்து 37 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 688 புத்தகங்களும் காணாமற் போயுள்ளன.

இப்புத்தகங்களை இரவல் பெற்று வைத்திருப்போர் அந்தந்த பொது நிலையங்களில் ஒப்படைத்து நூல் நிலையத்தின் அபிவிருத்திக்கு உதவுமாறு பிரதேச சபை விசேட ஆணையாளர் பு. சுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.
(ஐ-117)

### தொழில்நுட்ப மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 25
உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவக மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கலந்துரையாடலில் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆண்டு பகல், மாலை நேர மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுள்ளனர். (ஐ-10)

### கருத்தரங்கு

தென்மராட்சி, ஏப். 25
தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், செயலாளர்களுக்கான விசேட கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

இவ் வருடத்துக்கான அபிவிருத்தி பற்றிய விடயங்கள் ஆராயப்பட விருப்பதால் அனைத்து கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர், செயலாளர்களையும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் அறிவித்துள்ளார்.
(ஐ-117)

### ★ வெளிநாட்டுக்கு சிசுக்களை விற்ற
## முன்னாள் ஜோர்தான் தூதருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை

கொழும்பு, ஏப் 25
ஜோர்தான் நாட்டுக்கான இலங்கையின் முன்னாள் தூதர் கபூல் காசிலுக்கு 3 ஆண்டு கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட குழந்தைகளை வெளிநாட்டவருக்கு விற்றார் என்ற குற்றத்துக்காக அவர் தண்டிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தாய்மார்களுக்குப் பிறந்த, குறைந்தது 35 சிசுக்களை ஐரோப்பிய தம்பதியர்களுக்கு இவர் விற்றுள்ளார் என்று வழக்கைத் தொடுத்த அரச வழக்கறிஞர் குற்றஞ் சாட்டியிருந்தார்.
(ஐ-4)

### கிழக்குத் தாக்குதலில்
## படையினரின் கவச வாகனம் தகர்க்கப்பட்டதாக அறிவிப்பு

வாழைச்சேனை, கும்புறுமூலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இரு வேறு தாக்குதல் சம்பவங்களில் இராணுவ கவசவாகனம் ஒன்று தகர்க்கப்பட்டதாகவும், 11 துப்பாக்கிகள் உட்பட இராணுவ தளபாடங்கள் பல மீட்கப்பட்டிருப்பதாகவும் விடுதலைப் புலிகள் வன்னியில் அறிவித்துள்ளனர்.

திங்கட்கிழமை காலை 9-30 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலை முடித்துக்கொண்டு வாழைச்சேனைப் பகுதிக்கு சென்ற புலிகளின் மீது தாக்குதல் நடத்த கும்புறுமுலை கல்மடு, வாழைச்சேனை காகித ஆலை இராணுவமுகாம்களிலிருந்து கவசவாகன சகிதம் இராணுவத்தினர் சுற்றிவளைத்ததாகவும்—

இதனைத் தொடர்ந்து இரு தரப்பினரிடையேயும் மோதல்கள் மூண்டதாகவும் புலிகள் மேலும் தெரிவித்தனர். இவ் விரு சம்பவங்களிலும் 5 புலிகள் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.
(7ஆம் பக்கம் பார்க்க)

### பீரிஸ் அமெரிக்காவில்

உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியனவற்றின் வருடாந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக நீதி அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் நேற்று வாஷிங்டன் பயணமானார்.

### சமய சந்நிதிகளில்

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீகாயாரோஹண சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமானது. எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி பஞ்ச ரதோற்சவமும், 6 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.
(ஐ-30)

---

கோப்பாய்
லயன்ஸ் கழகம்

கண் பார்வை குறைந்தோருக்கு
கண்ணாடி வழங்குவதற்கான
## கண் பரிசோதனை முகாம்

மேற்படி முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 27 - 04 - 1997 அன்று பின்வரும் இடங்களில் நடைபெறும்.

I. அச்சுவேலி மகாவித்தியாலயம்
காலை 9.00 மணி - மு. ப. 12.00 மணி வரை

II. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
பி.ப 1.00 மணி - பி. ப. 4.00 மணி வரை

கண்பார்வை பாதிக்கப்பட்டோர் சகலரும் இம் முகாமில் பங்கு பற்றி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கோப்பாய் லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டப்படுகின்றனர்.

Dr. வை. தியாகராஜா
தலைவர்

(46500)

---

## ஆசிரியர் தேவை

யா/விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

தூயகணிதம், பிரயோக கணிதம்,
புள்ளிவிவரவியல்
ஆகிய பாடங்களை உள்ளடக்கிய
**கணிதப் பட்டதாரி தேவை.**

நேர்முகத் தேர்வு; 28 - 4 - 1997
திங்கள் 10-00 மணி (இலங்கை நேரம்)
சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

கா. சந்திரபாலன்
அதிபர்

(46727)

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லத்துரை வரதலிங்கம்

(இளைப்பாறிய அதிபர் — யாழ். வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம், முன்னாள் சாரண ஆணையாளர் — யாழ். மாவட்டம்)

மலர்வு: 1929 - 09 - 25
உதிர்வு: 1990 - 05 - 12

**திதி: 1997 - 04 - 25**

அமரராகி ஆண்டேழாகும் நினைவுநாளில்
''சிறந்த சேவையால் புகழுடன் வாழ்ந்து
சீரிய அன்புடன் துணையாய் விளங்கிய
தங்களின் சீரிய பண்பினை நினைவுறுகின்றோம்''

- குடும்பத்தினர்

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(46723)

---

**"BOSCO INSTITUTE"**

25, றக்கா வீதி, யாழ்ப்பாணம்
SPOKEN ENGLISH
இற்கான
GRAMMAR

**BY. BRITTO**

ஆரம்பம்:
26 - 04 - 97
காலை 8.00 - 9.00

**A/L 97**
''வரவு செலவுத் திட்டம்''
திரு. விக்கி
செவ்வாய், வியாழன்
நடைபெறுகின்றன

(46728)

---

## உங்கள் கவனத்துக்கு

உதயன் அலுவலகம்
**இப்போது**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற விலாசத்தில் இயங்குகிறது.

செய்தியாளர்கள், விளம்பரதாரர்கள், விநியோக முகவர்கள், வாசகர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் மேற்படி விலாசத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- நிர்வாகத்தினர்

---

## தேவை

ஒலிப்பதிவு செய்யக் கூடிய வானொலிப்பெட்டி
(TWO - IN - ONE RADIO)
உடன் தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.

உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஆக்க பூர்வம் இல்லாதவை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணை இரண்டாவது தடவையாக நேற்றும் பலாலியில் ஆரம்பமாகியது. பாதுகாப்பு அமைச்சு நியமித்த அதிகாரிகளையுடைய இதே விசாரணைக் குழு, முன்னர் ஜனவரியில் இங்கு வந்து விசாரணை நடத்திச் சென்றது.

முந்திய விசாரணையின் பலன் - விளைவு குறித்து இன்னும் முழுமையான விவரங்கள் தெரியவரவில்லை. காணாமற் போனவர்கள் அல்லது கைது செய்யப்பட்டவர்கள் என்று கருதப்படுவோரின் பட்டியலில் உள்ள சுமார் 600 பேரில் 104 பேர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டிருப்பதாக ஒரு தகவல் மட்டுமே வெளியாகி உள்ளது.

இத்தகைய பின்னணியில் முக்கிய விடயங்கள் இரண்டு முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

படையினர் சம்பந்தமான குற்றச்சாட்டை அவர்களே விசாரணை செய்வது சரியா? — என்ற கேள்வியை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம் எழுப்பியுள்ளார்.

வடக்கில் காணாமற் போனோர், ஒன்றில் விடுதலைப் புலிகளுடன் இணைந்திருக்கலாம் அல்லது வெளிநாட்டுக்குச் சென்றிருக்கலாம் என்று அரச அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார் அல்லவா? இந்தக் கருத்தை யாழ்ப்பாணத்தில் இயங்கும் கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

எந்தவித இராணுவத் தொடர்புமற்ற சுதந்திரமான, ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையிலான விசாரணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்பதே நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்தும் நிலைப்பாடாகவும் உள்ளது,

இது விடயத்தில் அரசு நியாயமான ஒரு நடவடிக்கையை மேற்கொள்வது குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டும்.

மேலும்—

கைதானோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் முன் வைத்துள்ள விடயத்தையும் அரசு கவனத்தில் எடுத்தாக வேண்டும்.

1996-ம்வருடஏப்ரல் மாதப் பிற்பகுதியிலும் மே மாத முற்பகுதியிலும் வலிகாமம் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னரே குடாநாட்டில் இளைஞர்,யுவதிகள் கைதாகியுள்ளனர்; காணாமற் போயுள்ளனர்.

அப்படியிருக்க அரசு அதிகாரி வெளியிட்ட கருத்து முழுப் பூசனிக்காயைச் சோற்றில் புதைக்க எடுக்கப்படும் முயற்சி என்றே கருதப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் சார்பில் இவ்வாறு கருத்து வெளியிடப்படுவதால் அதிகாரிகளுக்கு அல்ல ஒட்டுமொத்தமாக அரசாங்கத்துக்கே கெட்ட பெயர் சென்றடையும். மக்கள் காணாமற் போவது போன்ற கூருணர்ச்சி விடயங்களில் இத்தகைய கருத்துக்கள் வடக்கு மக்களை அரசின் மீது வெறுப்புக் கொள்ளவே செய்யும். அரசு விரும்புவது போல அவர்களின் இதயங்களை வெல்வதற்கு உதவமாட்டா.

# குஜ்ராலுக்கு புலிகள் வாழ்த்துச் செய்தி

லண்டன், ஏப். 25

இந்தியப் பிரதமராகப் பதவியேற்றுள்ள ஐ. கே. குஜ்ராலுக்கு வாழ்த்துத் தெரிவித்து, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சர்வதேச செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களாகிய நாங்கள் இந்தியாவுடன் நீண்டகால வரலாற்று முக்கியத்துவம் மிக்க உறவு கொண்டவர்கள். இந்த உறவுகளைப் போற்றி வளர்க்கவே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

இந்திய தமிழகத்து மக்களோடு எமக்குள்ள உறவு மட்டுமல்லாமல் பரந்துபட்ட இந்தியாவின் கலாசார அபிலாஷைகளையும் நாங்கள் பகிர்ந்து கொள்ளுகின்றோம். இந்திய மக்களுடனான எமது நட்புறவு எதிர் வரும் ஆண்டுகளில் வளரும் என்றும் நம்புகின்றோம்.

தாங்கள் பிரதமர் பதவி ஏற்றதில் உண்மையிலேயே தமிழ் மக்கள் உற்சாகமடைந்துள்ளார்கள். தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை ஆதரித்தும், அவர்கள் மீது நடத்தப் பட்ட இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் உங்கள் குரல் ஒலிக்கும் என்றும் நம்புகின்றோம் — இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-10)

# ஜனாதிபதி நிதியிலிருந்து யார் யாருக்கு உதவி?

## ஐ.தே. கட்சி எம்.பி. கேள்வி

கொழும்பு, ஏப். 25

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து யார் யாருக்கு உதவிகள் வழங்கப்பட்டன என்ற விவரத்தை வெளியிடுமாறு ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினரான சரத் கொங்காகே நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பவிருக்கிறார்.

கடந்த வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை யார் யாருக்கு உதவி வழங்கப்பட்டது என்ற விவரத்தை வெளியிடுமாறு பிரதமரிடம் கேள்வி எழுப்ப அவர் முன் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

அடுத்துக் கூடும் நாடாளுமன்றக் கூட்டத்தில் இக் கேள்வி எழுப்பப்படும்.

(இ-3-150)

# வில்லூன்றி மயான பாவனைக்கு அனுமதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். வில்லூன்றி இந்து மயானத்தை பாவனைக்கு அனுமதிக்குமாறு ஈ.பி.டி.பி. அமைப்பினர் 51 ஆவது படையணியின் கட்டளை அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடிப்படையாக வைத்து ஈ.பி.டி.பி. அமைப்பினர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மயானத்தினுள் எல்லோரையும் அனுமதிக்க முடியாதிருப்பின் இறந்தவரின் உறவினர் பத்துப் பேரையாவது மயானத்தினுள் சென்று உடலை தகனம் செய்ய அனுமதிக்குமாறு கடித மூலம் 51 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலேகல்லவிடம் தெரிவித்துள்ளனர்.

(இ-4)

## படையினரின்...

(ஆறாம் பக்கத் தொடர்)

இந்த இரு இடங்களிலும் இடம்பெற்ற மோதல்களில் தமது தரப்பில் லெப்டினன்ட் சுபராஜ் (சண்முகராஜ் சுரேஸ்), 2 ஆம் லெப்டினன்ட் கவிதாவரன் (பரந்தாமன் சிவகுமார்), 2ஆம் லெப்டினன்ட் விஜயசோதி (நிசாகரன் பூபாலரத்தினம்), 2 ஆம் லெப்டினன்ட் சாந்தசீலன் (எட்மண்ட் ரதீஸ்குமார்), மற்றும் ரிதுமாறன் (சிவஞானம் ரவிச்சந்திரன்) ஆகியோர் வீரச்சாவடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை—

வாழைச்சேனையில் இடம்பெற்ற மோதலில் பலியான விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் என இராணுவத்தினரால் அடையாளம் காணப்பட்டு ஐந்து சடலங்கள் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

அவைகளில் ஒரு சடலத்துக்கு உரியவரின் வயது 60 எனக் குறிப்பிடப்பட்டிருந்ததை அடுத்து அந்தச் சடலத்தை ஏற்க செஞ்சிலுவை அதிகாரிகள் மறுத்துள்ளனர். ஏனைய நான்கு சடலங்களுமே அவர்களால் பொறுப்பேற்கப்பட்டன.

தாம் பொறுப்பேற்ற நான்கு சடலங்களையும் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் எடுத்துச் சென்ற சமயம் கரடியனாறு கறுத்தப்பாலம் சோதனை முகாமில் சடலங்களைச் சோதனையிட்ட படையினர் சடலங்களைக் கொண்டு செல்வதற்கான போதிய ஆவணங்கள் வைத்திருக்கவில்லை என்று கூறி அவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

பின்னர் அச் சடலங்கள் ஏறாவூர் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டன.

(ஐ)

## தேவாலய வெள்ளிவிழா

தென்மராட்சி, ஏப். 25

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித விகோரியார் தேவாலயம் புனரமைக்கப்பட்ட 25ஆவது வருட பூர்த்தி விழாவும், தேவாலய பங்குத் தந்தை அருட்திரு. பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளின் குருத்துவ வெள்ளி விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் நடைபெறவுள்ளன.

இவ் விழாக்களையொட்டி விசேட திருப்பலி ஆராதனைகள் யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் நடத்தப்படும்.

(ஐ-117)

## நாளை

**சித்திரை 15**

**சனிக்கிழமை**

திதி: சதுர்த்தி
பின் இரவு 1.04 வரை.
நட்சத்திரம்: கேட்டை
முன் இரவு 11.34 வரை.
சுபநேரம்: 2.59- 4.29
ராகுகாலம்: 8.59- 10.29

# தமக்குள் அழும் நோயாளிகள்

## வாசகர் திருமுகம்

தமக்குள் அழும் நோயாளிகள் யார்?

அவர்கள்தான் புறத்தோற்றத்தில் இனங்காணமுடியாதவர்கள். அவர்கள் நொண்டிகளுமல்லர். வேதனை மேலீட்டால் அலறுபவர்களுமல்லர். அவர்கள்தான் இருதய நோயாளிகள்.

அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கக்கூடாதவர்கள். உளவியல் ரீதியாக கவலைப்படவோ ஆவேசப்படவோ கூடாதவர்கள். அந்தோ அவர்களின் பரிதாபநிலை!

அவர்கள் பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்யும்போது சோதனைச் சாவடிகளில் சுறுசுறுப்பாக இறங்கியாகவேண்டும். வேகமாக நடந்து சென்று பஸ் வண்டியினுள் நெரிசல்பட்டு ஏறவும்வேண்டும். ஐயா! என்னால் முடியாத காரியம். அதனால்தான் இறங்கவில்லை! என்று சொல்வதைக் கேட்பதற்கு யாருமில்லை. படையினருக்கு மொழிப் பிரச்சினை ஒருபுறம். புறத்தோற்றத்தில் இனங்காண முடியாததால் சந்தேகம் மறுபுறம். படையினருக்குப் பயந்து பஸ் நடத்துநர்கள் அள்ளி வீசும் கண்டன வார்த்தைகள் இன்னொரு புறம்.

ஒருசோதனைச் சாவடியா? இல்லை, இல்லை; பலசாவடிகள்! இவர்களில் தினமும் பிரயாணம் செய்யும் அரச தனியார் ஊழியர்களும் அடங்குவர். அவர்களின் நிலை இன்னும் பரிதாபகரமானது.

இருதய நோயாளிகளை தொல்லைப்படுத்தும் படையினரதும் பஸ் ஊழியர்களினதும் நியாயவாதங்கள் பல அவற்றுள் சில பின்வருமாறு உள்ளன:

★ நடந்து வந்து ஏறமுடியும். ஏன் இறங்க முடியாது என்கிறார்கள்.

★ இருதய நோயாளிகளானால் சோர்வுற்று நலிவுற்றுத் தோற்றமளிக்க வேண்டுமாம்.

★ பஸ் வண்டிகளில் பயணிகள் இருக்கும்போது பஸ் வண்டிகளைச் சோதிக்க முடியாதாம்.

★ பஸ் வண்டி அதிக நேரம் தரித்து நிற்கக் கூடாதாம்.

★ பஸ்வண்டிக்காரருக்கோ, தாங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரசூசிகைப்படி இயங்கவேண்டுமாம்.

★ நோயாளிகளானால் தனியார் வாகனத்தில் செல்லலாமே:— என்றும் சொல்கிறார்கள்.

மேற்கண்ட ஆறு நியாயவாதங்களுக்கும் விஷயம் விளங்கியவர்கள் உரிய மறுமொழிகளைப் புரிந்துகொள்ளுவார்கள்.

எனவே பரிகாரம் என்ன? இருதய நோயாளிகளில் அதிகமானோர் அரசினர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். அவர்களுக்கு படையினருடைய அனுசரணையுடன் ஒரு விசேட அடையாள அட்டை வழங்கலாம் என எண்ணுகின்றேன். அங்ஙனம் வழங்கி அவர்களுடைய வாழ்நாளை நீளவைக்கலாம் என்பதுதான் என்னுடைய உள்ளக் கருத்து.

அடையாள அட்டை என்றதும் நோயாளியின் படம் தேவை என்பதல்ல. இன்று அதிகமாக எல்லோரிடமும் தேசிய அடையாள அட்டையும், படையினரால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டையும் இருக்கின்றன. அவற்றின் இலக்கங்களைத் தாங்கிய அடையாள அட்டை ஒன்றினைத் தயாரிப்பது சிரமமான காரியமொன்றல்ல.

அந்த அடையாள அட்டையில் படையினருக்கும் சோதனையிடல் சம்பந்தப்பட்டோருக்கும் ஒரு வேண்டுகோள் வாசகம் பொறிக்கப்படலாம்.

''இவர் ஓர் இருதய நோயாளி, இவர் சுறுசுறுப்பாக இயங்குதல், களைப்படைதல், கவலைப்படுதல், ஆவேசப்படுதல் போன்றவை இவருக்கு ஆபத்தை விளைவிக்கும். இவரைப் புறத்தோற்றத்தில் இனங்காண முடியாது. எனவே இவரை மன்னிக்கவும்.''

மேற்கண்ட வேண்டுகோள் வாசகத்தை மும்மொழிகளிலும் பொறிக்கலாம் இவ்வட்டைகள் அரசவைத்திய அதிகாரிகளினால் கையொப்பமிடப்பட்டு முத்திரையிடப்பட்டிருந்தாலும் மேலும் உதவியாக இருக்கும்.

இவ்விடயம் தொடர்பாக அரச வைத்தியசாலை உயர் அதிகாரிகள், மேலும் மக்கள் நலன்புரி அதிகாரிகள் கூட்டாக படையதிகாரிகளுக்கு விளங்க வைத்து ஒரு முடிவுக்கு வரலாமென நினைக்கின்றேன். அத்துடன் இந்த அனுபவத்தை வைத்து மேலும் மக்களுடைய கஷ்ட நஷ்டங்களை நீக்கத் திட்டங்கள் தீட்டலாம் என்று நம்புகிறேன்.

க. சண்முகநாதன்

சாவகச்சேரி.

# தீவுப்பகுதி உ. அ. அதிபர் பிரிவுகள் தரம் உயர்வது எப்போது?

யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய யாவும் பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு புதிய பொலிவுடன் சிறப்பாக மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. செயலகங்களாக இயங்குகின்றன.

மேற்குறிப்பிட்ட மூன்று அலுவலகங்கள் மட்டும் தரம் உயர்த்தப்படாது பின் தங்கிய நிலையில் மக்களுக்கு குறைந்த சேவைகளை ஆற்றி வருகின்றன என்பது எமக்குப் புரியவில்லை. அரசாங்க அதிபர் தான் இவ்விடயத்தில் தகுந்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

குறிப்பிட்ட உதவி அரச அதிபர் பிரிவுகளில் தரமான உத்தியோகத்தர்களோ அல்லது வசதிகளோ இல்லையா? இவை தரம் உயர்த்தப்படும் என நாம் நீண்டகாலம் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் அதற்கான அறிகுறி எதனையும் காணோம். மூன்று அலுவலகங்களுக்கும் தரமான உத்தியோகத்தர்களையோ போதிய உத்தியோகத்தர்களையோ அரச அதிபர் அனுப்பாது பின்னடித்து நிற்பது ஏனோ என்றும் புரியவில்லை.

தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளே பலகாலமாகவே அரச கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருவது யாவரும் அறிந்ததே. இப்பகுதியை பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுப்பதில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாவது நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கின்றோம்.

தி. சிவப்பிரகாசம்.

வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

# சுய தொழில் வாய்ப்புக் கடனை மீண்டும் வழங்க ஜனாதிபதி பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். மாவட்டத்தில் ''சுரதுற'' என்னும் சுய தொழில் வாய்ப்புக்கான 10 ஆயிரம் ரூபா கடன் வழங்கும் திட்டத்தை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனை ஜனாதிபதி பணித்துள்ளார்.

இக்கடன் வழங்கும் திட்டத்தை உடன் நடைமுறைப் படுத்த வசதியாக யாழ். மாவட்டத்தில் உள்ள வங்கி அதிகாரிகளை அழைத்து பேச்சு நடத்துமாறும் ஜனாதிபதி அரச அதிபரைக்கேட்டுள்ளார்.

இத்திட்டம் யாழ்ப்பாண இலங்கை வங்கிக் கிளையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு 5 பேருக்கு கடன் வழங்கப்பட்ட நிலையில் கொழும்பு தலைமையகத்தில் இருந்து கிடைத்த உத்தரவையடுத்து நிறுத்தப்பட்டிருந்தது. (இ-3)

# சிமெந்தை இந்தியாவிலிருந்து நேரடியாக எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ். மாவட்டத்தில் கட்டடங்களை திருத்த தேவையான சிமெந்து மற்றும் கட்டடப்பொருள் ஆகியவற்றை இந்தியாவில் இருந்து நேரடியாகக் காங்கேசன்துறைக்கு கப்பல் மூலம் எடுத்து வருவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது.

குடாநாட்டிற்குத் தேவையான சிமெந்தும், கட்டடப் பொருள்களும் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படுவதால் தாமதம் ஏற்படுவதுடன் விலையும் கூடுதலாக இருப்பதாலேயே இந்தியாவில் இருந்து எடுத்துவர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும்—

இது தொடர்பாக சாதகமான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும்— அறிய வந்தது. (இ-3)

# பூசகரை திருமலைக்கு அழைத்து வருவதில் இழுபறி நிலை

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயப் பகுதியில் இடம்பெற்ற கொலை தொடர்பாக யாழ்ப்பாண நீதிமன்றத்தில் சரண் அடைந்த சந்தேக நபரான விசாகேஸ்வரக் குருக்களை யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்குக் கொண்டு செல்வதில் சட்டப்பிரச்சினை எதிர்நோக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரை திருகோணமலைக்குக் கொண்டு வருவதற்கு விமானப்படையினரும் கடற்படையினரும் தயாராக உள்ளனர் என்றும் —

ஆனால் நீதிமன்ற உத்தரவுப்படி யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை பொலீஸாரோ அல்லது படையினரோ திருகோணமலைக்குக் கொண்டு வர முடியாதிருப்பதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை ஆணையாளர் திணைக்களத்தின் ஏற்பாட்டின்பேரிலேயே சந்தேக நபரை அழைத்துவர முடியும்.

இந்த விடயத்தில் சிறைச்சாலை அதிகாரிகள் பொலீஸாரின் உதவியை நாடுவதில் சட்டத்தில் இடம் உண்டு.

ஆனாலும் வடபகுதியின் இன்றைய சூழ் நிலையில் சந்தேக நபரை பொலீஸார் திருமலைக்கு அழைத்து வருவது என்பது மிகுந்த இழுப்பறிக்குரிய காரியமாக இருப்பதாகவும் —

இது தவிர நீதிமன்ற உத்தரவின் பேரில் சந்தேக நபரை யாழ்ப்பாணத்தில் இருந்து அதிகாரிகள் எவரும் கொண்டு வருவதானால் சகல விதமான சிக்கல்களுக்கும் அவர்களே பொறுப்பேற்கவும் வேண்டிவரும் என்றும் — கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (இ)

# அமெரிக்க உதவித் திட்ட அதிகாரிகள் இன்று வருகை

யாழ்ப்பாணம், ஏப். 25

அமெரிக்க உதவித் திட்டத்தின் அதிகாரிகள் ஐவர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்கள்.

இன்று காலை பலாலிக்கு வந்து சேரும் இவர்கள் குடாநாட்டில் கெயர் அமைப்பு மேற்கொள்ளும் திட்டங்கள் குறித்து ஆராய்வார்கள்.

அமெரிக்க உதவித் திட்ட அமைப்பின் உதவியுடன் கெயர் நிறுவனம் விவசாயத் திட்டங்கள் பலவற்றை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

புதிய திட்டங்கள் குறித்தும் இவர்கள் இங்கு ஆராய்வர். (இ-3)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 25

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்றும், நாளையும் கப்பல் சேவைகள் இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 544 முதல் 560வரை உள்ளவர்கள் இன்றும், நாளையும் காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# இரத்தச் சோகையால் வன்னியில் 22 பேர்பலி!

கொழும்பு, ஏப். 25

கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரிகளில் இரத்தச் சோகை காரணமாகவும், இரத்தம் வழங்க முடியாமற்போனதாலும் கடந்த மூன்று மாதங்களில் 22 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

நோயாளிகளுக்குத் தேவையான இரத்தத்தை சேமித்து வைக்க அங்குள்ள ஆஸ்பத்திரிகளில் வசதி இல்லாத காரணத்தால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும் அபாயம் உருவாகி இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## தந்தை செல்வா நினைவு பேருரை

யாழ்ப்பாணம், ஏப். 25

தந்தை செல்வாவின் நினைவு தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நினைவுப் பேருரை நிகழ்த்தப்படவுள்ளது,

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நினைவு நாள் விழாவில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியன், யுனெஸ்கோ கல்வி இணைப்பாளர் சி. வேலாயுதம் ஆகியோரும் நினைவுப் பேருரைகள் நிகழ்த்துவார்கள்.

தந்தை செல்வா நினைவுக் குழு இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது. (இ-111)

# மக்கா தீ விபத்தில் இறந்தோரில் ஐந்து பேர் இலங்கையர்கள்

கொழும்பு, ஏப். 25

புனித ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மக்கா சென்றபோது இடம்பெற்ற தீ விபத்தில் கொல்லப்பட்டோரில் ஐவர் இலங்கையர்கள் ஆவர். ஏழு இலங்கையர்கள் காணாமற்போய் உள்ளனர். 15 இலங்கைப் பெண்கள் காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மக்காவில் இருந்து கடந்த புதன்கிழமை கொழும்பு திரும்பிய சுகாதார சமூக சேவைகள், நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பௌஸியுடன் பிரதி தகவல்துறை அமைச்சர் அலவி மௌலானாவும் மக்காவில் இருந்து கொழும்பு திரும்பி உள்ளார்.

மக்காவில் தாம் தங்கியிருந்த கூடாரத்தில் இருந்து கால் மைல் தூரத்தில் தீ விபத்து இடம்பெற்றதாகவும் —

மொத்தம் ஒரு லட்சம் கூடாரங்கள் அப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்ததாகவும் —

அதிகளவு வெப்ப நிலையும் கடுங் காற்றும் அப்பொழுது இருந்ததால் தீ வேகமாகப் பரவ ஆரம்பித்ததாகவும்— அமைச்சர் பௌஸி தெரிவித்தார்.

தீ பரவ ஆரம்பித்த போது எல்லோரும் தமது கூடாரங்களை விட்டு ஓடினர் என்றும் —

அப்பொழுது தாமும் தமது மகன், மனைவி மற்றும் பிரதி அமைச்சர் அலவி மௌலானா அவரது மகன் ஆகியோரும் மக்களோடு சேர்ந்து ஓடியதாகவும்

இப்படி ஓடும் போது மிதிபட்டே 5 இலங்கையர்களும் இறந்ததாகவும் அமைச்சர் பௌஸி மேலும் கூறினார். (இ)

# அதிபர் முகாமைத்துவப் பரீட்சை வினாத்தாள்கள் யாழ். வந்தன

யாழ்ப்பாணம், ஏப். 25

நாளை நடைபெறவிருக்கும் அதிபர்களுக்கான முகாமைத்துவ அனுமதிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

கொழும்பில் நடைபெறவிருந்த இப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்துமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரானாவுடன் பேச்சு நடத்தி இருந்தார்.

இதன் பயனாக இப்பரீட்சை நாளை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருப்பதாக ஈ. பி. டி. பி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

உ_தயன்
கிளைப் பணிமனை
கொக்குவில்
உதயன் கிளைப் பணிமனை காங்கேசன்துறை வீதியில்
கொக்குவில் — குளப்பிட்டிச் சந்தியில்
சித்திரை 13 ஆம் நாள் சனிக்கிழமை (26-04-97)
பிற்பகல் 2-59 மணி முதல் 4-29 மணி வரையுள்ள சுபவேளையில்
மங்களகரமாகத் திறந்து வைக்கப்படும்.
செய்தியாளர்கள், விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள், வாசகர்கள், அபிமானிகளின்
நலன் கருதி இக்கிளை திறந்து வைக்கப்படுகிறது
என்பதனை மகிழ்ச்சியுடன்
அறியத் தருகின்றோம்..
- நிர்வாகத்தினர்

யாழ்.
றோட்டறி
கழக
அங்கத்தவர்களுக்கு
சகல யாழ். றோட்டறி கழக அங்கத்தவர்களும் 25-04-1997 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு யாழ். ஹற்றன் நஷனல் வங்கிக் கட்டடத்தில் நடைபெறும் கூட்டத்துக்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
தலைவர்
யாழ். றோட்டறி கழகம்.
(சி/607)

## நெதர்லாந்துக்...

(முதலாம் பக்கத் தொடர்)

நகர வடிகால் திருத்தம் தொடர்பாக யாழ். மாநகர ஆணையாளரும் — விளக்குவார்கள்.

அதன் பின்னர் இவர்கள் யாழ். ஆஸ்பத்திரி, யாழ். ஆயர் இல்லம், புத்தூர் மெதடிஸ்த ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு விஜயம் செய்வர்.

புத்தூரில் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளைச் சந்தித்து இவர்கள் கலந்துரையாடுவர். (இ-3)

## ஈழப்...

(முதலாம் பக்கத் தொடர்)

மதுரையில் இருந்து விடுதலைப்புலிகளுக்கு பொருள்களைக் கடத்திச் செல்லும் திட்டம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு முறியடிக்கப்பட்டது என்றும் —

மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் பகுதிகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக 9 புலிகள் உட்பட 19 பேர் கைது செய்யப்பட்டதாகவும் —

நவீனமான கருவிகள் பல கைப்பற்றப்பட்டதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# பொன்னாலைப் பாலம் திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25

காரைநகர் மக்கள் நலன் கருதி பொன்னாலைப் பாலம் ஊடான போக்குவரத்துக்கு அனுமதிக்குமாறு 51 ஆவது படையணி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலேகல்லவிடம் ஈ. பி. டி. பி. யாழ். அலுவலகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரை நகரில் வாழும் மக்கள் தமது தேவைகளுக்காக யாழ்ப்பாணம் வர பல மணி நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளதாகவும்—

நோயாளிகள், பாடசாலை மாணவர்கள் பெரிதும் கஷ்டமடைவதாகவும்—

இதன் காரணமாக பொன்னாலைப் பாலம் ஊடாக போக்குவரத்துச் செய்ய அநுமதிக்க வேண்டும். அன்றேல் இராணுவ பாதுகாப்புடன் அப்பாதை ஊடாக பஸ்சேவை ஒன்றை நடத்த வேண்டும் என்றும் — மேஜர் ஜெனரல் பலேகல்லவுக்கு எழுதிய கடிதத்தில் ஈ. பி. டி. பி. அமைப்பினர் கேட்டுள்ளனர். (இ-3)

## நலன்புரி நிலைய மாணவர்

குருநகர், ஏப். 25

நலன்புரி நிலையங்களில் இருந்து பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்று வரும் மாணவர்களில், இதுவரை பாடசாலைப் புத்தகப்பைகளையும், பாடசாலை உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளாதவர்களின் விவரங்களை உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களையும் யாழ். கல்வி வலய அலகு 1 கேட்டுள்ளது. (இ-51)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-04-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org